**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி), அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை – திரு.ஆ.அகஸ்டின்ராஜ்,**

**செ.மு.ந.க. எண்.26234/ 2020/ பஅ3** | **நாள் :05.04.2023**

பொருள்: கருணை அடிப்படை நியமனம் – ஊரக வளர்ச்சி அலகு – திருவள்ளூர் மாவட்டம் – சோழவரம் ஊராட்சி ஒன்றியம் – உதவியாளர்– திரு.S.உதயகுமார்(லேட்) 20.10.2020 அன்று பணியிடைக் காலமானவர் – வாரிசுதாரர் செல்வி.U.வினிதா என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்து உத்தரவு வழங்க முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது – இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டது – பணிவரன்முறை செய்து உத்தரவிடல்.

படிக்கப் பட்டது:
1. மாவட்ட ஆட்சித்தலைவர், திருவள்ளூர் அவர்களின் செ.மு.ந.க.எண்.26234/2020/பஅ3, நாள்.20.05.2021
2. அரசாணை (3ப) எண்.48 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ4) துறை நாள்.26.10.2022
3. தொடர்புடைய ஆவணங்கள்

*************

**உத்தரவு–**

திருவள்ளூர் மாவட்டம், ஊரக வளர்ச்சி அலகு, சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தில் உதவியாளராக பணிபுரிந்து பணியிடைக்காலமான திரு.S.உதயகுமார்(லேட்) என்பவரின் வாரிசுதாரரும் மகளுமாகிய செல்வி.U.வினிதா என்பவருக்கு பார்வை 1–ல் காணும் செயல்முறை உத்தரவின்படி, கருணை அடிப்படையில் இம்மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டது. பார்வை 2–ல் காணும் அரசாணையில் தனியர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 26.05.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணியினை வரன்முறை செய்து ஆணை வெளியிட்டுள்ளது.

மேற்படி அரசாணையின் அடிப்படையில் தனியர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 26.05.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி),
திருவள்ளூர்.

பெறுநர்
செல்வி.U.வினிதா,
இளநிலை உதவியாளர்,
உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகம், திருவள்ளூர்.
(சார்ந்த அலுவலர் மூலமாக)
**நகல்**
உதவி இயக்குநர்(தணிக்கை) திருவள்ளூர் மாவட்டம்.